# பாஞ்சாலி சபதத்தில் தத்துவ அறக்கருத்துக்கள்

காளிமுகிலா.த
இளங்கலைத்தமிழ்
காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி.

32

ஆய்வுச்சுருக்கம்

இதிகாசங்களில் ஒன்றான மகாபாரத்திரல் உள்ள நிகழ்ச்சியைக் காப்பியமாக பாஞ்சாலி சபதம் எனும் பெயரில் படைத்துள்ளார். பாஞ்சாலி சபதம் சூதின் தோல்லியையும் அறத்தின் வெற்றியையும் பெண்ணினத்தின் சீர்மையையும் விளக்குகிறார். இக்காப்பியத்தின் கதாப்பாத்திரங்கள் மூலம் அறக்கருத்துகளை வலியுறுத்துகிறார். பாரதியார். பிறர் பொருளை விரும்பாமை தம்மைச் சார்ந்தவரைக் காத்தல் இவைகளே வாழ்வியல் அறம் என்று பாஞ்சாலி சபதம் இயம்புகிறது.

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்பது புறநானூறு அரசன் நல்லவனாக இருந்தால் தான் நாட்டு மக்கள் நல்ல வண்ணம் வாழ இயலும். அந்நியராட்சியின் கொடுமையைப் பேயரசு செய்தால் பிணத்தின்;னும் சாத்திரங்கள் என்று பேசும் பாஞ்சாலி சபதம் பாரதி ஒரு வேந்தாந்தி என்று சொல்லுமளவு தத்துவக் கருத்துக்களும் அறவியாலாளன் என்று சொல்லுமளவு அறக்கருத்துக்களும் சிந்தைய அள்ளும் இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன்.

## தத்துவக் கருத்துக்கள்:

### இறை இயல்பு:

காப்பியத் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ள பிரமதுமதியில் இறை இயல்புகளைச் செறிவாகச் சொல்லியுள்ளான் பாரதி. இறைமைக்குப் பெயர் இல்லை. உருவம் இல்லை. மனத்தால் புத்தியால் அறிய முடியாதது. பேரறிவும் ஆனந்தமும் அதன் இயல்புகள்.

நாமமும் உருவும் அற்றே – மனம்
நாடரி தாய்ப்புந்தி தேடரிதாய்
ஆமெனும் பொருளனைத்தாய் வெறும்
அறிவுடன் ஆனந்த இயல்புடைத்தாய்
நின்றிடும் பிரம்ம என்பார் அந்த
நிர்மலப் பொருளினை நினைத்திடுவேன்.

(பாஞ்சாலி சபதம் - 1)

என்பது பாரதி வாக்கு

### ஞானியர் இயல்பு:

சகுனி பாண்டவர்க்கு எதிரான சூழ்ச்சியில் திரிதராட்டிரனையும் உடன்படுத்த எண்ணிப் பலவாறு பேசுகிறான். அந்நிலையில் திரிதராட்டிரன். கண்ணன் பரம்பொருளான நாராணனின் அவதாரம் என எடுத்துப் பேசுகிறான். நான் என்னும் ஆணவம் துறந்து உலகமே தான் என்று கொண்டு நடுநிலையோடு கடமையாற்றி எல்லா உயிர்களிடத்தும் நல்லருள் பாராட்டி வாழ்ந்து ஞானியர் இயல்பு என்கிறான். ஆயிரங்கால் முயற்சியால் பெறும் பேறுகள் இவை

KAMARAJ COLLEGE
Accredited with A+ Grade by NAAC
இந்து சமுதாய நலச்சங்கங்களால் 1966-ல் தொடங்கப்பட்ட கல்லூரி
(Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli)
THOOTHUKUDI - 628003

நானெனும் ஆணவம் தள்ளலும் - இந்த
ஞாலத்தைத் தானெனக் கொள்ளலும் - பர
மூவகைக் காலம் கடத்தலும் - நடு
வான கருமங்கள் செய்தலும் - உயிர்
யாவிற்கும் நல்லருள் பெய்தலும் -

(பாஞ்சாலி சபதம் - 82)

என்பது பாரதி வாக்கு. இப்பண்புகள் அனைத்தையும் தாயின் வயிற்றிலிருந்து பிறிந்த போதே பெற்றிருப்பவர் தெய்வமாண்புடையவர்.

தற்செலவர் இயல்பு:

விடாமுயற்சி பிறர் பொருளைச் சிறிதும் விரும்பாமை தம்மைச் சார்ந்தவரைக் காத்தல் இவை செல்வர் இலக்கணம் என்கிறான் பாரதி.

தம்மொரு கருமத்திலே – நித்தம்
தளர்வறு முயற்சி மற்றோர் பொருளை
இம்மியும் கருதாமை – சார்ந்
திருப்பவர் தமை நன்கு காத்திடுல்
இம்மையில் இவற்றினையே செல்வத்
திலக்கணம் என்றனர் மூதறிஞர்.

(பாஞ்சாலி சபதம் - 1)

விதி இயல்பு :

தூது வந்த சிறிய தந்தை விதுரன் துரியோதனன் அழைப்பையும் சூழ்ச்சியையும் புலப்படுத்துகிறான் அந்நிலையில் வீமன் வெகுண்டு பேசுகிறான்.

ஏனைய தம்பிமார்கள் பணிவோடு எதிர்த்துப் பேசுகிறார்கள். அந்நிலையில் குயவனை கைச் சக்கரம் போல நாமெல்லாம் விதியின் கைப் பாவைகள் என விளக்குகிறான் தருமன்.

கைப்பிடி கொண்டு கழற்று வோன் - தன்
கணக்கிற் கழன்றிடும் சக்கரம் - அது
தப்பி மிகையுங் குறையுமாச் சுற்றும்
தன்மை அதற்குள் தாகுமோ?
(பாஞ்சாலி சபதம் - 1)

செப்பிடு வித்தை போலத் தோன்றும் செயல்கள் யாவும் விதி ஏற்று நடக்கும் செயல்கள் அதற்கு முடியவில்லை.

-முடிவு

எங்கணு மின்றி எவற்றினும் என்றும்
ஏறி இடையின்றிச் செல்வதாம் - ஒரு

சங்கிலி யொக்கும் விதி கண்டீர் -
வெறும் சாத்திரமன்றிது சத்தியம்
(பாஞ்சாலி சபதம் - 1)

மனித வாழ்க்கை நீர்க்குமிழி போல நிலையற்றது இன்ப துன்பங்கள் கானல் நீர் போன்றவை. எனவே எதுவரினும் மகிழ்ச்சியோடு வாழப் பழக வேண்டும்.

தோன்றி அழிவது வாழ்க்கை தான் - இங்குத்
துன்பத் தொ டின்பம் வெறுமையாம் - இவை
முன்றில் எதுவரு மாயினும் - களி
மூழ்கி நடத்தல் முறை கண்டீர் –

(பாஞ்சாலி சபதம் - 1)

என்பது திருதராட்டிரன் மூலம் பாரதி கூறும் வாழ்க்கைத் தத்துவம் ஆகும். சேறிறில் உழலும் புழுவாயினும் செல்வமிக்க அரநராயினும் பிச்சை ஏற்று வாழும் ஏழையாயினும் உள்ளிருக்கும் உயிர் ஒன்றுதான். எல்லா உயிர்களும் தாம் எடுத்த உடம்பிற்கு ஏற்ற கடைமைகளைச் செய்து வாழுகின்றன. எனவே எப்போதும் கடமை செய்யத் தவறக் கூடாது என்று அறிவுறுத்திகிறான்.

பாரதி புழமைக்கு மதிப்பு:

தருமனைச் சூதாட அழைக்கிறான் சகுனி. துவறான முன்னைச் சிறு வழக்கை அறம் என்று எண்ணி இதற்குச் சம்மதக்கிறான் தருமன். அப்போது தம் கூற்றாக

முன்பிருந்ததோர் காரணத்தாலே
மூடரே பொய்யை மெய் எனலாமோ?
முன்பெனச் சொலுங் காலமதற்கு
மூடரே ஓர் வரையறை உண்டோ?

(பாஞ்சாலி சபதம் - 1)

என்று தொடங்கி முன்பு என்பது நேற்றையும் குறிக்கும் மூன்று கோடி வருடத்திற்கு முற்பட்ட காலத்தையும் குறிக்கும். முன்பிருந்த மக்கள் எலாம் முனிவர்களா? நீர் பிறக்கும் முன்பாரில் மூடர்களே பிறந்ததில்லையா? பொய்யொழுக்கை அறம் என்றும் பொய்யர் கேலியைச் சாத்திரம் என்றம் கொண்டு அறப்பற்று மிக்கிருந்தும் அறிவின்றி அழிந்தவர்கள் கோடி மதியினும் விதி பெரியது. வுறதியைவிடப் பெரிய பொருள் உலகில் எதுவும் இல்லை. விதியால் பிறர் செயும் கருமப் பயனும் நம்மை வந்து அடையும் என்று வேதனையோடு பேசுகிறான் பாரதி.

ஆறக் கருத்துக்கள்:

இக்காப்பியத்தில் விதுரன் விகர்ணன் திரௌபதி முதலியோர் வாயிலாக அறக் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

நெறியோடு வாழ வேண்டும்:

தருமன் நாட்டைப் பணயம் வைத்துச் சூதாடுகிறான். துரியோதனன் வெற்றி பெறுகிறான். இதைக் கண்டு திரிதராட்டிரன். சொர்க்கபோகம் பெறுபவன் போல முகம் மலர்ந்து காணப்படுகிறான். அந்நிலையில் திரிதராட்டிரனை நோக்கி மலைந்தேன் மீது மிக்க மோகங்கொண்ட வேடன் அருகில் கால் நழுவிச் சாகும் படுமலைச் சரிவு இருப்பதைக் கருதமாட்டான் என எச்சரிக்கிறான் விதுரன்.

வீட்டிலே நரியைவிடப் பாம்பைப் பிள்ளை என வளர்திட்டோம் நாட்டிலே புகழோங்க நரியை விற்று புலிகளைக் கொள்வாய் கூகையை காக்கையென விற்று மயில்களைக் கொள்வாய். நேறி இழந்தபின் வாழ்வதில் இன்பம் நேரும் என்றும் நினைக்க வேண்டாம் என அறிவுறுத்துகிறான். விதுரன்

மக்கள் நலமே அரச நலம்:

சகுனியின் சூழ்ச்சியில் விதிவயப்பட்டு நாட்டை வைத்துச் சூதாடுகிறான் தருமன். சீச்சி சிறியர் செய்கை செய்தான் என அருவருக்கிறான் பாரதி. கோயிற்பூசை செய்வோர் சிலையைக் கொண்டு விற்பது போல வாயில் காத்து நிற்போன் வீட்டை வைத்திழத்தல் போல தேயம் வைத்திழந்தான் என உளம் வருந்துகிறான். நாட்டு மக்கள் எல்லாம் தம்மைப் போல மனிதர்கள் என்ற கருதாமல் ஆட்டுமந்தை என்று அரசர்கள் எண்ணி விட்டார்களே! அவர்கள் ஆற்றவேண்டிய அரசு நீதியைச் சரிவரச் செய்ய வில்லையே! ஒரஞ் செய்யாமல் தருமத்தின் உறுதியைக் கொன்று விடாமல் சோராம் செய்திடாமல் பிறரைத் துயரில் வீழ்த்திடாமல் ஊரை ஆளும் முறை உலகில் எங்கும் இல்லையே என நொந்து போய்ப் பேசுகிறான்.

திரௌதியை அவைக்கு அழைத்து வரும்படி தேர்ப்பாகனை இரண்டாம் முறை அனுப்புகிறான் துரியோதனன். அந்நிலையில் பூமியில் வாழும் எல்லோர்க்கும் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது கண்டுள்ளோம். ஆனால் உலகாளும் அரசர் அறமாட்சியைக் கொல்வது கண்மு மகிழலாமா? அன்பும் தவமு சிறந்த அந்தணர் இதை கண்டு களிக்கலாமா? என்று பாகனிடம் வினவுகிறாள் திரௌபதை

மக்கள் நலமே தம் நலம் என்று அரசர்கள் ஆள வேண்டும் என்று இக்கூற்றுக்களால் அறிவுறுத்துகிறான் பாரதி

கொடுமையை எதிர்த்து நிற்க வேண்டும். திரௌபதியின் கருங்குழல் பற்றி அவைக்கு இழுத்துச் செல்கிறான் துச்சாதனன். விலங்குச் செயலைப்பார்த்தும் வெறுமனே புலம்புகிறார்கள் வீரமிலா நாய்கள்

வீரமிலா நாய்கள் விலங்காம் இளவரசன்
தன்னை மித்துத் தராதலத்திற் போக்கியே
பொன்னையவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்.
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?
ஏன்று வெகுண்டு பேசுகிறாள் பாரதி

(பாஞ்சாலி சபதம் - 1)

பெண் அடிமைத்தனம் கூடாது. நீதி கேட்டழுத பாஞ்காலியிடம் ஒருவன் தன் தாரத்தை விற்கலாம். தானமாகத் தரலாம். தூனமாகத் தரலாம். தன்னை அடிமையாக்கிய பின்னும் நின்னை

அடிமையாக்ககலாம். இதுவே சாத்திர நெறி என்று வீடுமன் பதில் கூறுகிறான்.

பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் என்று கொதிக்கிறாள் திரௌபதி. ஆப்போது பாட்டான் சொன்ன பதில் கொதிக்காறாள் திரௌபதி. அப்போது பாட்டான் சொன்ன பதில் பொருந்தாது என மறுக்கிறான் விகர்ணன். வேதநெறி மாறிப் பின்னாளில் வழங்கும் இந்நெறி வழுவானது. ஏந்தையர் தம் மனைவியரை விற்றதில்லை. இன்றுவரை அரசியரை யாரும் சூதில் தோற்றதில்லை. விலைமாதர்க்கு விதத்ததைப் பிற்கால நீதிக்காரர் சாத்திரத்தில் புகுத்திவிட்டனர். சூதர் வீட்டில் கூட ஏவற் பெண்களைப் பணயம் வைப்பதில்லை. தன்னை இழந்து அடிமையான ஒருவனுக்குத் தாரம் ஏது? வீடேது?

அவனுக்கு உடைமை என்பது இல்லை. பெண்ணரசு கேட்கும் மேற்கூறிய கேள்விக்குப் பதில் கூறிங்கள் என்ற அவையோரிடம் நீதிக்குப் பரிந்துரைக்கிறான் விகர்ணன்.

முடிவுரை:

இவ்வாறு விதுரன் விகர்ணன் திரௌபதி ஆகிய பாத்திரங்களின் கூற்றாகவும் தன் கூற்றாகவும் அறக் கருத்துக்களையும் தத்துவக் கருத்துக்களையும் அழுத்தமாக ஆவேசமாகப் பேசியுள்ளான் பாரதி.

துணை நூல்கள்

பாஞ்சாலி சபதம்
டாக்டர் நா.சுப்புரெட்டியார் சர்வோதயா இலக்கியப் பண்ணை
நாவல் பிரின்டர்ஸ் சென்னை